## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.125/2013

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முனிரத்தினம் | மதம் | : இந்து |
| த/பெ | : லட்சுமண நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 80 | கிராமம் | : சின்னகடம்பூர் மோட்டூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**18.02.2025**

<u>வா.சா.1 நீதிமன்ற அனுமதியின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>

1. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு 07.10.2013 ம் தேதியிட்டு அறிக்கையுடன் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். **(நீதிமன்ற ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு 14.09.2021 ம் தேதியிட்ட அறிக்கை மற்றும் வரைபடத்துடன் நில அளவையர் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். **(நில அளவையர் வரைபடம் நீ.ம.சா.ஆ 7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

<u>2, 3, 5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு சொத்து எனக்கு பாத்தியம் என்பதை காட்ட என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1912 ம் ஆண்டு கிரைய ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு நான் எந்த கிரைய ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான்தான் அனுபவம் செய்கிறேன் என்பதை காட்ட அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எந்த புல எண்ணிற்கு அடங்கல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் புல எண்.188/4 க்கு அடங்கல் தாக்கல் செய்துள்ளேன்.

2. வழக்கு சொத்தின் புல எண் சொல்ல முடியுமா என்றால் புல எண்.188/4 ல் 37 செண்ட் ஆகும். நான் சொல்வது தவறு என்றாலும் நான் புல எண்.188/5,

188/6 க்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் புல எண்.188/4 க்கு அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 ஆன பட்டா புல எண்.188/3 க்குரியது என்றாலும் வா.சா.ஆ 1 பட்டாவிற்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

3. வா.சா.ஆ 1 பட்டாவில் உள்ள கண்ணய்யா இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் அவரது மகன்கள் 5 பேரும் தரப்பினராக உள்ளார்கள். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வழக்கு என் பெயரில் மட்டும்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. புல எண்.188/5, புல எண்.188/6 க்கு பட்டா துரைசாமியின் வாரிசுகளான செங்கம்மாள், சாந்தி, வெங்கடேசலு, வேலு பெயரில் உள்ளது என்றால் சரிதான். புல எண்.188/4 அரசாங்கத்திற்கு சொந்தமான நிலம் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் புல எண்.188/4 அரசாங்கத்திற்கு சொந்தமான நிலம் என்றாலும் எங்களுக்கு சொந்தமான நிலம் இல்லை என்றாலும் சரியல்ல.

4. புல எண்.188/4 ல் என் பெயரில் பட்டா, சிட்டா, அடங்கல் உள்ளதா என்றால் இல்லை. புல எண்.188/4 ல் தென்னை மரம், தேக்கு மரம் உள்ளது என்றாலும் 40 வருடங்களாக நாங்கள்தான் அனுபவத்தில் உள்ளோம் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் தாக்கல் செய்துள்ளோம். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் SLR நகல் உள்ளது. SLR நகல் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் SLR நகலை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

5. என் முன்னோர்கள் வழக்கு சொத்தை அனுபவித்து வந்ததாக சொல்லும் நிலையில் அவர்கள் பெயரில் எந்தவித வருவாய் ஆவணங்களும் இல்லை என்றால் எழுத்து மூலமான ஆவணங்கள் இல்லை. பழைய புல எண்.16 க்கு புதிய புல எண்.188/1, 188/2, 188/3 ஆக உள்ளது என்பதை காட்ட ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு பழைய அ பதிவேடு உள்ளிட்ட வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. புல எண்.188/4 ல் நானும் என் மகன்களும் அ.வ.எண்.90/2015 என வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் ஆமாம். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது

என்றால் ஆமாம்.

6. சேஷம்மாள் பெயரில் உள்ள வா.சா.ஆ 6 உயில் தாக்கல் செய்துள்ளதில் அந்த சொத்துக்கள் சேஷம்மாளுக்கு எப்படி பாத்தியம் என்பதை காட்ட சேஷம்மாள் பெயரில் உள்ள ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு எந்த ஆவணங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சேஷம்மாளின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் சேஷம்மாளின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

7. வா.சா.ஆ 6 உயிலில் கிழமேல் 40 கஜம், தென்வடல் 60 கஜம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதன் நான்குமாலில் வடக்கு பக்கம் தெரு, தெற்கு பக்கம் புல எண்.15/1, 15/5 நிலங்கள், கிழக்கு பக்கம் பத்தினி சின்ன செங்கம்ம நாயுடு வீடு, மேற்கு பக்கம் கோவிந்தப்ப நாயுடு வீடு என காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ 6ல் உள்ள சொத்துவிவரமும் இந்த பிராது சொத்து விவரமும் ஒன்றுக்கு ஒன்று சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 7 ஆவணத்தில் புல எண்.15/3, புல எண்.16 ஆகியவை மட்டுமே உள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ 7ல் உள்ள சொத்திற்கும் இந்த பிராது சொத்திற்கும் ஒன்றுக்கு ஒன்று சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

8. புல எண்.188/4க்கும் எனக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் அது அரசாங்கத்திற்கு சொந்தமான சொத்து என்றாலும் சரியல்ல. புல எண்.188/4ல் நான் எந்த உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. புல எண்.188/5, புல எண்.188/6 பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்து என்றாலும் இன்றுவரை பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளக்க வந்தார்கள் என்றால் ஆமாம். நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஆணையர் வந்தபோது வழக்கு சொத்தை நான் அடையாளம் காண்பித்து அதனடிப்படையில் வழக்கு சொத்து அளவீடு செய்யப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நீதிமன்ற ஆணையர் நான் அடையாளம் காண்பித்த இடத்தைதான் வழக்கு

சொத்தாக காண்பித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

9. அது பொய்யான அறிக்கை என்பதால் பிரதிவாதிகள் மனு செய்து அதன் பேரில் நில அளவையருடன் மீண்டும் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்தார் என்றால் அது எனக்கு தெரியாது. அளக்க வந்தபோது நான் உறவினர்கள் இறந்துவிட்டதால் அதற்காக வெளியூர் சென்றிருந்தேன். என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ 5 புகைப்படங்களில் உள்ள நபர் என் மகன் என்றால் கண்ணாடி இல்லாததால் என்னால் சரியாக பார்க்க முடியவில்லை. என் மகன் தாஸ், ஐயப்பன், கண்ணய்யன் ஆகியோர் இருந்தார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ 5 புகைப்படங்களில் உள்ள வெள்ளை சட்டை அணிந்த நபர் என் மகன் தாஸ் என்றால் ஆமாம்.

10. என் மகன்கள் சண்டைபோட்டு பிரச்சனை செய்ததால் அன்றைய தினம் அளக்க முடியாமல் நீதிமன்ற ஆணையர், நில அளவையர் திரும்பி வந்துவிட்டனர் என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர், நில அளவையர் தனது அறிக்கையில் வழக்கு சொத்தில் மரங்கள் இல்லை என்றும் முள் செடிகள் மட்டுமே இருப்பதாக குறிப்பிட்டுள்ளனர் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள பொய்யான வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து என்னுடையது என்பதை காட்ட உரிமை ஆவணங்கள், வழக்கு சொத்து என் அனுபவத்தில் உள்ளது என்பதை காட்டும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)